**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.183/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : தென்னரசு | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of November 2024.

15.11.2024

(எதிரிகள் 1, 2, 4 ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். நான் அதிமுக கட்சியில் ஊராட்சி மன்ற கிளைச்செயலாளராகவும்இருந்து வருகிறேன். சுமார் 6 மாதத்திற்கு முன்பு தேதி நாள் நினைவில் இல்லை. புழுதிக்குளத்தில் உள்ள பஞ்சாயத்து போர்டு முன்பு உள்ள அதிமுக கட்சி கொடிக்கம்பத்தில் 1ம் எதிரி சமயசெல்வி அவரது மாட்டை கட்டியிருந்தார். நான் சுமார் 07.00 மணியளவில் நான் அந்த மாட்டை அவிழ்த்துவிட்டேன். அதற்கு 1ம் எதிரி சமயசெல்வி என்னை பார்த்து தேவிடியா மகனே அவுசாரி மகனே என்று தரக்குறைவாக பேசினார்.

2) மேலும் அங்கு ஆஜர் 4ம் எதிரி கடல்முருகன், குமாரக்குறிச்சியை சேர்ந்த ஒரு நபரும் மற்றொரு நபரும் என்னை கம்பை வைத்து வலது தோள்பட்டையிலும், வலது காலிலும் என்னை அடித்தார்கள். நான் உடனே பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு சிகிச்சை எடுத்துவிட்டு வந்து கீழத்தூவல் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள

கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1).** என்மீது எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் என்னை கைது செய்து நீதிமன்ற காவலில் வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.183/2024
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : நாகநாதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of November 2024.

15.11.2024

(எதிரிகள் 1, 2, 4 ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். சுமார் 6 மாதத்திற்கு முன்பு தேதி நாள் நினைவில் இல்லை. இரவு 09.00 மணியளவில் எனது அண்ணன் அ.சா.1 தென்னரசு என்பவருக்கும் எனது அத்தை ஆஜர் 1ம் எதிரி சமயசெல்வி மற்றும் ஆஜர் 4ம் எதிரி கடல்முருகனுக்கும் புழுதிக்குளத்தில் உள்ள அ.சா.1 தென்னரசு வீட்டின் அருகே சண்டை நடந்தது. நான் சண்டையை விலக்கிவிட்டேன். யாருக்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.